**1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்**

| சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணக்கமின்மைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) 2003 யூன் 02ஆந் திகதிய பீஈடீ/12ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.1ஆம் பந்தி | நிதிக்கூற்றுக்கள் கணக்காண்டு நிறைவடைந்து 60 நாட்களினுள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2020 ஒக்தோபர் 20ஆந் திகதியே கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் செயற்பட வேண்டியமை. |
| (ஆ) 2007 ஒக்தோபர் 02ஆந் திகதிய பீஈடீ/45ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை | பொறுப்புகள் தொடர்பான கூற்று நிதிக்கூற்றுகளில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | - மேற்படி - | - மேற்படி - |

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டிற்கான சபையின் நிதிப் பெறுபேறு ரூபா 18,650 ஆன மிகையாக காணப்பட்டதுடன், அதனோடு ஒத்த கடந்த வருடத்தின் மிகை ரூபா 18,650 ஆகும். 1980 மற்றும் 1983ஆம் ஆண்டுகளிலிருந்து முன்கொண்டுவரப்படும் ரூபா 195,000 ஆன வீடமைப்பு மற்றும் ஆதனக் கடன் மீதிக்குரிய வருடாந்தம் சீராக்கம் செய்யப்படும் வட்டி வருமானம் இந்த மிகையால் புலப்படுத்தப்படுகின்றது.

**3. ஏனைய முக்கியமான அவதானிப்புகள்**

| கணக்காய்வ அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) கடன் சபை 1976ஆம் ஆண்டின் போது கலைப்பதற்கு தீர்மானிக்கப்பட்டு, அதன் கண்காணிப்பு பணிகள் 2001 ஆகஸ்ட் 01 ஆந் திகதி வரையிலும் அரச கணக்குகள் திணைக்களத்திற்கு | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | 2020 செப்தம்பர் 25ஆந் திகதிய கடிதத்தின் பிரகாரம், திறைசேரியின் பிரதிப் பணிப்பாளரின் அங்கீகார்துடன் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. |

| | | | |
|---|---|---|---|
| | சாட்டப்பட்டிருந்ததுடன், 2001 ஆகஸ்ட் 02ஆந் திகதி முதல் கலைப்பதற்காக அரச நிதித் திணைக்களத்திற்கு ஒப்படைக்கப்பட்டிருந்தது. எனினும், மீளாய்வாண்டின் இறுதியளவில் 18 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் கடந்திருந்த போதிலும், கலைப்பதற்கான பணிகள் முன்னெடுக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஆ) | மூன்று கடன்பட்டேபரால் ரூபா 195,000 ஆன வீடமைப்பு மற்றும் ஆதனக் கடன் மீள் செலுத்தல் புறக்கணிக்கப்பட்டிருந்ததுடன், அந்த கடனை அறவிடுவதற்காக 1980 மற்றும் 1983ஆம் ஆண்டுகளில் வழங்கு தொடரப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டின் திசெம்பர் 31ஆந் திகதிய வரையிலும் அந்த வழங்குகள் நிறைவடைந்திருக்கவில்லை. அவ்வாறே, கடனுக்காக ஈடு வைக்கப்பட்ட சொத்துக்களின் உரித்துறுதிகள், வடைபடங்கள், பிணைகள், கடன் பதிவேட்டு மீதிகளை சான்றுபடுத்தல் ஆகியன நீதிமன்ற நடவடிக்கைகளுக்காக நீதிமன்றத்தின் வசம் வைக்கப்பட்டுள்ளதாக பதில் வழங்கப்பட்டுள்ளதுடன், அதற்குரிய சான்றுபடுத்தல்கள் மற்றும் அந்த பதிவேடுகளின் பிரதிகள் கணக்காய்விற்கு முன்வைக்கப்படவில்லை. மேலும், கடனுக்காக பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய ரூபா 721,302 ஆன வட்டி 2019 திசெம்பர் 31ஆந் திகதியில் உள்ளபடியாக அறவிடப்பட்டிருக்கவில்லை. | - மேற்படி - | ஈடு வைக்கப்பட்ட சொத்துக்களின் உரித்துறுதிகள், வடைபடங்கள், பிணைகள், கடன் பதிவேட்டு மீதிகளை சான்றுபடுத்தல் ஆகியவற்றை பெற்றுக்கொண்டு கடனுக்கான வட்டியை அறவிட வேண்டியமை. |